## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புருஷோத்தமன் | மதம் | : இந்து |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 57 | கிராமம் | : காபூல் கண்டிகை |
| தொழில் | : வர்ணம் பூசுபவர் | வட்டம் | : திருத்தணி |

24.09.2025

<u>வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் அழைத்து நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன் என்றால் வழக்கறிஞர் சொல்லி வந்தேன். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** அங்கம்மாள் அழைத்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எங்கு வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும்போது அங்கம்மாள் என்னுடன் இருந்தாரா என்றால் அன்று அங்கம்மாள் வரவில்லை.

2. அன்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும்போது என்னுடன் யார் இருந்தார் என்றால் வழக்கறிஞர் இருந்தார். அங்கம்மாள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். நான் எந்த ஊர் என்றால் காபூல் கண்டிகை ஆகும். அங்கம்மாள் எந்த ஊர் என்றால் காபூல் கண்டிகைதான் தற்போது திருமணமாகி சென்னையில் உள்ளார். திருமணம் ஆனது முதல் சென்னையில்தான் உள்ளாரா என்றால் ஆமாம். எனது வயது என்ன என்றால் எனது வயது 57 ஆகும். 1973ம் ஆவணப்படி அங்கம்மாளுக்கு பாத்தியம் என்று

சொல்லியிருப்பதில் 1973ம் வருட ஆவணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் நான் 1967ல் பிறந்தேன். 5 அல்லது 6 வயதிருக்கும். அங்கம்மாள் சொல்லித்தான் 1973ம் வருட ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வழக்கு சொத்து காலியாக தான் உள்ளது என்றால் ஆமாம். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண்.83/2009 பற்றி சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

3. அசல் வழக்கு எண்.83/2009 பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கு எண்.83/2009 பற்றிய விவரம் அங்கம்மாளுக்கு தெரியுமா என்றால் நான் சொல்லித்தான் அங்கம்மாளுக்கு தெரியும். வழக்கு சொத்து பாகப்பிரிவினை நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சிவா என்பவர் எங்கள் ஊர் என்றால் எங்கள் ஊர் இல்லை. அவர் எந்த ஊர் என்றால் அரக்கோணத்தை சேர்ந்தவர் ஆவார். சிவாவின் வாரிசுகள் பற்றி தெரியுமா என்றால் 5, 6 பேர் இருப்பார்கள். அவர்கள் பெயர் தெரியாது. சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியம் என்பது தெரியுமா என்றால் அங்கம்மாள் வாங்கியதை தவிர வழக்கு சொத்து குறித்து வேறு விவரங்கள் எதுவும் தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமான மூல ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் அங்கம்மாள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை.

(மறு விசாரணை இல்லை)